# **DEPOSITION OF WITNESS**

---

**MCOP. No.** 7312/2024 **DATE:02.04.2026**

Deposition of Witness : P.W.3

Name :Mr.S.Ravimani

Father Name :Mr.Subramani

Age :

Address :

Cell Phone No. :

NAZIR AHAMED Digitally signed by NAZIR AHAMED

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 2nd day of April 2026.

-----------------------------------------------------------------------------------------------

**மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை**

நான் தமிழ் நாடு மின்வாரியம் வில்லிவாக்கம் மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் நிருவாக துறை கண்காணிப்பாளராக பணிபுரிகிறேன். நீதிமன்றத்தின் அழைப்பாணையின் போில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் சாட்சியம் அளிக்க எனக்கு கொடுக்கப்பட்ட அதிகார கடிதம் தாக்கல் செய்கிறேன். அது மசாஆ 31. என்னுடைய அடையாள அட்டை நகல் தாக்கல் செய்கிறேன் அசலுடன் ஒப்பிட்டுப்பார்த்து குறியீடு செய்யப்படுகிறது. அது மசாஆ 32. எங்கள் அலுவலகத்தில் வேலைபார்த்த பாலு என்பவரின் சம்பளச் சீட்டு நகல் தாக்கல் செய்கிறேன். அது மசாஆ 33. சனவாி 24 முதல் அக்டோபர் 24 வரை அவர் பணிக்கு வந்ததை காட்டக்கூடிய வருகை பதிவேட்டு நகல் தாக்கல் செய்கிறேன். அது மசாஆ 34. எங்கள் அலுவலகத்தில் பணிபுரிந்த பாலு என்பவர் விபத்தின்போது லைன் இன்ஸ்பெக்டராக பணிபுரிந்தார். இறக்கும்போது அவரது மாத சம்பளம் 1,01,003 ரூபாய் ஆகும். அவர் தொடர்ந்து பணிபுரிந்திருந்தால் மேலும் பதவி உயர்வு கிடைத்திருக்கவும் அதிக சம்பளம் பெறவும் வாய்ப்பு இருந்ததா என்றால் வாய்ப்பு இருந்தது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இறந்த நபரது சம்பளப் பட்டியல் வருகை பதிவேட்டு நகல் கொண்டுவந்துள்ளேன் அதை தவிர வேறு எதுவும் கொண்டுவரவில்லை. இறந்துபோன நபரது வாாிசுதாரருக்கு குடும்ப ஓய்வூதியம் எவ்வளவு வழங்கப்படுகிறது என்பது கணக்கு பாா்த்து தான் சொல்லமுடியும். குடும்ப ஓய்வூதியமாக பொதுவாக எவ்வளவு வழங்கப்படும் என்றால் 30 வருடங்களுக்கு மேல் பணிபுாிந்திருந்தால் அவரது சம்பளத்தில் 60 சதவிதத்தில் பாதி கொடுக்கப்படும். 30 வருடங்கள் பணிபுாியவில்லை என்றால் அந்த குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியமாக எவ்வளவு வழங்கமுடியும் என்றால் கணக்கிட்டுதான் சொல்லமுடியும். அவரது குடும்பத்திற்கு ஓய்வூதியமாக எவ்வளவு வழங்கப்படுகிறது என்ற விவரம் எங்கள் அலுவலகத்தில் உள்ளது. அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியும். இரண்டு வாரங்களில் தாக்கல் செய்யமுடியும். அவரது குடும்பத்தினா் குடும்ப ஓய்வூதிம் பெற்று வருகிறாா் என்ற விவரம் தொிந்துவிடும் என்பதால் அவற்றை கொண்டுவரவில்லை என்று சொன்னால் சாியல்ல. அவா் வருமான வாி செலுத்திவந்தாா்.

**முதல் எதிா் மனுதாரா் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை** - இல்லை.

X

என்னால் தட்டச்சருக்கு திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவர் சரி என ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

தேதி:02.04.2026.

NAZIR AHAMED

Digitally signed by NAZIR AHAMED

தலைமை நீதிபதி,

சிறுவழக்குகள் நீதிமன்றம்.